**இலங்கை திறந்த பல்கலைக்கழகம்**
**முகாமைத்துவ கற்கைகள் பீடம்**
**முயற்சியாண்மையும் சிறு வணிக முகாமைத்துவமும் உயர்தர சான்றிதழ் கற்கை நெறி**
**OSC 2405: செயற்பாட்டு முகாமைத்துவ அறிமுகம்**
**இறுதிப் பரீட்சை- 2024/2025**

**காலம்: இரண்டு (2) மணித்தியாலங்கள்**

*திகதி: 31 மே 2025* *நேரம்: மு.ப 9.30 - மு.ப.11.30*

அறிவுறுத்தல்கள்:

- **ஏதேனும் ஐந்து (05) வினாக்களுக்கு மாத்திரம் விடையளிக்கவும்.**
- **தெளிவற்ற கையெழுத்துக்களுக்கு புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது.**
- **இவ்வினாத்தாள் மூன்று (3) பக்கங்களில், ஆறு (6) வினாக்களை உள்ளடக்கியுள்ளது.**

**வினா இல. 01**

சமாதி ஒரு வாடிக்கையாளர்களின் தனிப்பட்ட கோரிக்கைகளுக்கு ஏற்ப தனிப்பட்ட பிறந்தநாள் கேக்குகளை தயாரிக்கும் ஓர் சிறு வணிகத்தை நடாத்துகிறார். அங்கு, ஒவ்வொரு கேக்கும் வாடிக்கையாளரின் விருப்பங்களுக்கு ஏற்ப தனித்துவமாக வடிவமைக்கப்படுகிறது.

a) இந்த சூழ்நிலையைப் கவனத்தில் கொண்டு, கேக் உற்பத்தி செயல்முறையின் (production system), முக்கிய கூறுகளை விளக்குக. (10 புள்ளிகள்)

b) சமாதி தனது வணிகத்தை விரிவுப்படுத்தும் முகமாக, தனிப்பயனாக்கப்பட்ட கேக் மற்றும் இதர உணவு வகைகளுடன், விருந்துகள் மற்றும் நிகழ்வுகளின் திட்டமிடல், முகாமைத்துவம் செய்தல், மற்றும் ஆலோசனை வழங்கும் சேவைகளை வழங்கி தனது வணிகத்தை விரிவுபடுத்தவும் திட்டமிட்டுள்ளார். இதன் அடிப்படையில், இது பொருட்கள் மற்றும் சேவைகளுக்கு இடையிலான பண்புகளை வேறுபடுத்துக. சமாதியின் வணிகத்தின் பண்புகளை ஒரு எடுத்துக்காட்டாகப் பயன்படுத்துக. (10 புள்ளிகள்)

**(மொத்தம் 20 புள்ளிகள்)**

**வினா இல. 02**

a) பல சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் (SME) தெளிவான உற்பத்தி திட்டம் இல்லாமல் செயல்படுகின்றன. இதனால் தாமதங்கள், வள வீணடிப்பு மற்றும் வாடிக்கையாளர் அதிருப்தி போன்ற பிரச்சினைகளை அடிக்கடி எதிர்கொள்கின்றன. ஒரு நிறுவனத்தின் ஸ்திரமான செயல்பாட்டை உறுதிப்படுத்த உற்பத்தியைத் திட்டமிடுவதன் முக்கியத்துவத்தை விளக்குக. (10 புள்ளிகள்)

b) வேகமாக நகரும் நுகர்வோர் பொருட்களை (FMCG) விற்பனை செய்யும் நிறுவனத்திற்கு இருப்புக் கட்டுப்பாட்டின் முக்கியத்துவத்தை பொருத்தமான எடுத்துக்காட்டுகளுடன் விளக்குக. (10 புள்ளிகள்)

**(மொத்தம் 20 புள்ளிகள்)**

**வினா இல. 03**

ஹிருனி ஒரு சிறிய வணிக உரிமையாளராவார், இது சுற்றுச்சூழலுக்கு உகந்த ஷாப்பிங் பைகளின் புதிய உற்பத்தி வரிசையை அறிமுகப்படுத்த விரும்புகிறார். இவ்வணிகத்தில் முதலீடு செய்வதற்கு முன் இந்த தயாரிப்புக்கான நுகர்வோரின் கேள்வியை புரிந்துகொள்ள முயற்சிக்கிறார்.

a) ஓர் உற்பத்தி முகாமையாளராக, நுகர்வோரின் கேள்வியை அடையாளம் காணவும், பொருத்தமான தயாரிப்பைத் தேர்ந்தெடுக்கவும் பின்பற்ற வேண்டிய படிகளை விளக்குக. (10 புள்ளிகள்)

b) சுற்றுச்சூழலுக்கு உகந்த ஷாப்பிங் பை விற்பனைக்குப் பயன்படுத்தக்கூடிய ஒரு எளிய சந்தைப்படுத்தல் திட்டத்தை முன்மொழிக. (10 புள்ளிகள்)

**(மொத்தம் 20 புள்ளிகள்)**

**வினா இல. 04**

ஜனித ஒரு உள்ளூர் உற்பத்தியாளராவார், அவர் போத்தலில் அடைக்கப்பட்ட பழச்சாறு தயாரிக்கும் ஒரு சிறிய தொழிற்சாலையை நிறுவ திட்டமிட்டுள்ளார். தற்போது பொருத்தமான தளத்தைத் தேர்ந்தெடுத்து உள் அமைப்பை வடிவமைக்கும் பணியில் ஈடுபட்டுள்ளார்.

a) புதிய பழச்சாறு தொழிற்சாலையை நிறுவ இடத்தைத் (site) தேர்ந்தெடுக்கும்போது கருத்தில் கொள்ள வேண்டிய முக்கிய காரணிகளை பகுப்பாய்வு செய்க. (10 புள்ளிகள்)

b) "உற்பத்தி தளவமைப்பு (product layout)" மற்றும் "செயல்முறை தளவமைப்பு (process layout)" ஆகியவற்றுக்கு இடையேயான வேறுபாட்டை விளக்குக. பழச்சாறுகளின் தொழிற்சாலைக்கு பொருத்தமான தளவமைப்பை காரணங்களுடன் பரிந்துரைக்க. (10 புள்ளிகள்)

**(மொத்தம் 20 புள்ளிகள்)**

**வினா இல. 05**

உறைந்த நிலையில் சாப்பிட தயார் நிலையில் உள்ள உணவு பொருட்களைத் தயாரிக்கும் (frozen ready-to-eat meals) ஒரு உணவு உற்பத்தி நிறுவனமானது. உற்பத்தியின் சீரற்ற தரம் மற்றும் கட்டளைகளை நிறைவேற்றுவதில் அடிக்கடி தாமதம் ஏற்படுவதால் பல சிக்கல்களை எதிர்கொள்கிறது.

a) செயல்திறனை மேம்படுத்துவதற்கும் வாடிக்கையாளர்களின் எதிர்பார்ப்புகளை பூர்த்தி செய்வதற்கும் நிறுவனத்தில் உற்பத்தி கட்டுப்பாட்டு முறைகளை எவ்வாறு பயன்படுத்தலாம் என்பதை முன்மொழிக. (10 புள்ளிகள்)

b) உறை உணவுகளின் உற்பத்தியில் தரத்தின் முக்கியத்துவத்தை விளக்கி, உறைந்த நிலையில் சாப்பிட தயார் நிலையில் உள்ள உணவுகளின் உற்பத்தியின் தரத்தை உறுதி செய்வதற்கான நடைமுறை நடவடிக்கைகளை பரிந்துரைக்க. (10 புள்ளிகள்)

**(மொத்தம் 20 புள்ளிகள்)**

**வினா இல. 06**

பின்வரும் தலைப்புகளில் சிறு குறிப்பு வரைக.

a) ஆயுதச் சேகரிப்பு (tooling up) என்ற கருத்தை விளக்கி பொருத்தமான எடுத்துக்காட்டுகளைப் பயன்படுத்தி அவை ஏன் தேவைப்படலாம் என்பதைப் பற்றி விவாதிக்கவும். (5 புள்ளிகள்)

b) ஒரு நல்ல தள வடிவமைப்பைக் கொண்டிருப்பதன் முக்கியத்துவத்தையும், நிறுவனத்தின் ஒட்டுமொத்த செயல்திறனுக்கு அது எவ்வாறு பங்களிக்க முடியும் என்பதையும் விளக்குக. (5 புள்ளிகள்)

c) பணி ஆய்வு (Work-study) பற்றியும் அப்பணி ஆய்வானது, உற்பத்தி / சேவை நிறுவனங்களில் பயன்படுத்துவதன் முக்கியத்துவம். (5 புள்ளிகள்)

d) பொருளாதார கட்டளைக் கணியம் (EOQ) மற்றும் இருப்பு முகாமைத்துவத்தில் அதன் முக்கியத்துவம். (5 புள்ளிகள்)

**(மொத்தம் 20 புள்ளிகள்)**

*-பதிப்புரிமைக்குரியது-*